செ.வெ.எண்–16 நாள்–05.11.2026

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு

–––––

ஈரோடு மாவட்டத்தில் சம்பத்நகர், பெரியார் நகர், கோபிசெட்டிபாளையம், பெருந்துறை, சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி ஆகிய ஆறு இடங்களில் இயங்கி வரும் உழவர் சந்தைகளில் கடந்த (01.11.2026)_ ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை வேளாண் விளைபொருட்கள் வார சந்தை தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள 6 உழவர் சந்தைகளிலும் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது இயற்கை வேளாண் விளைபொருட்களான பாரம்பரிய அரிசி வகைகள் (தூயமல்லி சீரகசம்பா, கருப்புகவுனி, மாப்பிளை சம்பா) காய்கறிகள், கீரைகள், பழங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான தேங்காய் எண்ணெய், மஞ்சள்தூள், முருங்கை பொடி, வாழைப்பூ பொடி, வாழைப்பூ இட்லி பொடி, வாழைப்பூ பொடி போன்றவைகளை 1325 கிலோ அளவுக்கு ரூபாய் 55,844 மதிப்பில் விற்பனை செய்துள்ளார்கள்.

இதன் மூலம் 14 விவசாயிகள் 488 நுகர்வோர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இனி வரும் காலங்களில் ஒவ்வொரு ஞாயிற்று கிழமைகளிலும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து உழவர் சந்தைகளிலும் இயற்கை வேளாண் வார சந்தை நடைபெறும். எனவே, உயிர்ம மற்றும் அங்கக துறையின் மூலம் வழங்கப்படும் இயற்கை விவசாயிக்கான சான்று பெற்றுள்ள (Scope Certificate) விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள உழவர் சந்தைகளில் விண்ணப்பித்து அடையாள அட்டை பெற்று கொண்டு தங்கள் இயற்கை வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தும் மற்றும் பொதுமக்கள் நஞ்சில்லா வேளாண் விளைபொருட்களை வாங்கி பயன்பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.